நிலமும் வானும் கடலும் நேற்று அதிர்ந்தது ..அந்த
நிலவும் வானில் இரவு நேரம் அழுதது ..
நந்திக்கடல் மௌனமாக கரைந்தது
வங்கக்கடல் கோபமாக இரைந்தது
நிலமும் வானும் கடலும் நேற்று அதிர்ந்தது ..அந்த
நிலவும் வானில் இரவு நேரம் அழுதது ..
நந்திக்கடல் மௌனமாக கரைந்தது
வங்கக்கடல் கோபமாக இரைந்தது

உலகம் முழுதும் தமிழர் தலைகள் உயர்ந்தது உயர்ந்தது உயர்ந்தது
உங்கள் உடலும் பகைவன் இருந்த குகையினுள் விழுந்தது விழுந்தது

தாவி நடந்திட்ட போதிலும் மேனியில் ஆயிரம் சூரியன் பூத்தது
தாவி நடந்திட்ட போதிலும் மேனியில் ஆயிரம் சூரியன் பூத்தது
உங்களின் சாவுமொரு பெரும் வாழ்வு எனச்சொல்லும் வேளையில் தேசமே வேர்த்தது
உங்களின் சாவுமொரு பெரும் வாழ்வு எனச்சொல்லும் வேளையில் தேசமே வேர்த்தது
வட்டுவாள் பாலமழுததது காற்றும் வந்துங்கள் காலில் தொழுதது ....
நந்திக்கடல் மௌனமாக கரைந்தது
வங்கக்கடல் கோபமாக இரைந்தது
நிலமும் வானும் கடலும் நேற்று அதிர்ந்தது ..அந்த
நிலவும் வானில் இரவு நேரம் அழுதது ..

மானம் பெரிதென வாழ்ந்துமே  தாயக மண்ணைமீட்டெழுப்பிய வேதங்கள்
மானம் பெரிதென வாழ்ந்துமே  தாயக மண்ணைமீட்டெழுப்பிய வேதங்கள்
எதிரியின் சேனைதனை முல்லைத் தீவில் மிதித்துமே சாவுக்கழித்ததும் பாதங்கள்
எதிரியின் சேனைதனை முல்லைத் தீவில் மிதித்துமே சாவுக்கழித்ததும் பாதங்கள்
நெஞ்சங்கள் யாவிலும் வாழுவீர் நாளை வந்தெங்கள் மண்ணை ஆளுவீர் ..
நந்திக்கடல் மௌனமாக கரைந்தது
வங்கக்கடல் கோபமாக இரைந்தது
நிலமும் வானும் கடலும் நேற்று அதிர்ந்தது ..அந்த
நிலவும் வானில் இரவு நேரம் அழுதது ..
நந்திக்கடல் மௌனமாக கரைந்தது
வங்கக்கடல் கோபமாக இரைந்தது

உலகம் முழுதும் தமிழர் தலைகள் உயர்ந்தது உயர்ந்தது உயர்ந்தது
உங்கள் உடலும் பகைவன் இருந்த குகையினுள் விழுந்தது விழுந்தது